**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.
Calendar )
Preliminary Register) CC.100/2023
Sessions)
( Prosecution P.W.3
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | வைரமுத்து | -- | |
| Father's Name | தங்கராஜ் | Calling | ஆட்டோ வைத்துள்ளேன். |
| Village | மங்காபுரம் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of December 2025.

**Accused Present.**
**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் தாலுகா, மங்காபுரம் தெற்குத் தெருவில் குடியிருந்து வருகிறேன். சொந்தமாக ஆட்டோ வைத்து தொழில் செய்து வருகிறேன். சாட்சி ஆதித்யா எங்களது தெருவைச் சேர்ந்தவர். சாட்சி ஆசைத்தம்பியை எனக்குத் தெரியாது. 27.12.2022ம் தேதி எனது TN67AX3471 என்ற ஆட்டோவில் நான் சவாரி ஏற்றிக்கொண்டு திருவில்லிபுத்தூர்–மதுரை ரோட்டில் ஐஸ்வர்யா மோட்டார்ஸ் அருகே சென்று கொண்டிருந்தபோது எனக்கு போன் வந்ததால் நான் வண்டியை நிறுத்தினேன். அப்போது ஆசை டயர் ஒர்க்ஸ் வைத்திருக்கும் ஆசைத்தம்பி என்பவரது மகன் மாதவன் என்பவர் TN67Q3227 என்ற இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். அப்போது அவருக்குப் பின்னால் வந்த TN67AQ9027 என்ற பதிவெண் உள்ள டேங்கர் லாரி வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து மாதவன் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் வலதுபுறத்தில் தட்டி விட்டது. அதனால் மாதவன் ரோட்டில் கீழே விழுந்து வலது கை, வலது கால், இடுப்பு ஆகிய பகுதிகளில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. சம்பவத்தைப் பார்த்தவுடன் அங்கிருந்த ஆதித்யா மாதவனின் தந்தைக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். அதன் பிறகு ஆசைத்தம்பி அங்கு வந்தவுடன் காயம் பட்ட மாதவனை அவ்வழியாக வந்த ஒரு ஆட்டோவில் ஏற்றி திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அதன்பிறகு சிகிச்சை பலனின்றி மாதவன் இறந்துவிட்டதாக நான் தெரிந்து கொண்டேன். சம்பவத்தின் போது மாதவனின் மீது மோதிய டேங்கர் லாரியின் பதிவெண்ணை மட்டும் நான் பார்த்தேன். வண்டி அங்கு நிக்காமல் சென்றுவிட்டதால் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. அதன் பிறகு

விசாரித்தபோது அந்த வாகனத்தை ஓட்டி வந்தவர் பெயர் தேவிபட்டிணத்தை சேர்ந்த வேல்முருகன் என தெரிந்து கொண்டேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of December 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN

Digitally signed by M VEERANAN
Date: 2025.12.19 16:31:02 -0400

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**